பக்கங்கள் : ஆறு
Registered as a Newspaper

Y.M.C.

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 01 புதன்கிழமை (16-12-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 20

## வடக்கு - கிழக்கில் தாக்குதல் பின்னடைவு

# பாதுகாப்பு நிலைமை முற்றாக அரசின் கட்டுப்பாட்டை மீறும்!

## இராணுவ ஆய்வாளர்கள் எச்சரிக்கை

கொழும்பு, டிசம்பர். 16

வடக்கு—கிழக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளில் மெத்தனப் போக்கை ஸ்ரீலங்கா அரசு கடைப்பிடித்து வருகிறது. இதனால் பாதுகாப்பு நிலைமை முற்றாக அரசின் கட்டுப்பாட்டை மீறும் நிலை ஏற்படும்.-இவ்வாறு ஸ்ரீலங்கா அரசுக்கு இராணுவ ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்திருப்பதாக அறிய வருகிறது.

இதேபோன்ற கருத்தை கொழும்புப் பத்திரிகையாளர்கள் பலரும் அரசுக்குச் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

"சண்டே ஐலண்ட்" வார இதழின் அரசியல் விமர்சகர் இது குறித்து தெரிவித்த கருத்தின் சாராம்சம் வருமாறு:-

வடபகுதியில் அரசப் படைகள் செயல்படாமல் இருப்பது, விடுதலைப் புலிகள் தங்கள் அதிகாரம், பலத்தைப் பலப்படுத்துவதில்தான் போய் முடியும் என பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் பலமான நிலைகளை உடைக்க முடியாத நிலைதான் அரசப் படைகளுக்கு ஒருநாள் ஏற்படும்.

**5 மாத காலமாக படைகள் செயலிழப்பு**

அரசுப் படைகள் ஐந்து மாதங்களாக செயலிழந்த நிலையில் உள்ளன.

இதன் மத்தியிலும் அதிவேகப் படகுகளையும் புதிய ஹெலிக்கொப்டர்களையும் வாங்கி படைகளைப் பலப்படுத்த அரசு முயல்கிறது.

எப்படியாயினும் —

விடுதலைப் புலிகளுக்கு [6 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலி படகுச் சேவையை இடைநிறுத்த ஓட்டிகள் முடிவு

யாழ்ப்பாணம், டிச. 16

கிளாலி போக்குவரத்துச் சேவையை — தற்காலிகமாக — இடைநிறுத்துவதென படகோட்டிகள் நேற்று முடிவு செய்தனர்.

கடற்படையினரின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதை அடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டது.

நேற்று படகோட்டிகள் ஒன்று கூடி நிலைமையை ஆராய்ந்த பின்னர், இவ்வாறு தீர்மானம் செய்தனர்.

படகோட்டிகளின் இந்த முடிவை அடுத்து கொழும்பு செல்வதற்காக கிளாலியில் காத்திருந்த ஏராளமான பயணிகள் நேற்று யாழ். நகர் திரும்பினர். (உ-3-15)

## கப்பல் சேவையும் இடைநிறுத்தப்படும்?

யாழ்ப்பாணம், டிச. 16

யாழ். மாவட்டத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் இரு கப்பல்களின் சேவைகளையும் தற்காலிகமாக நிறுத்த அத்தியாவசிய சேவைகள் நாயகம் முடிவு செய்துள்ளார்.

இது குறித்து யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு நேற்று கொழும்பிலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்தோருக்கு தற்சமயம் வழங்க வேண்டிய நிவாரணத்துக்குரிய பொருள்கள் கப்பல் மூலம் அனுப்பப்பட்டிருப்பதால் —

இவ்வாரம் பருத்தித்துறைக்கு வந்துசேரும் 'குமண' (5 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரியான் பாதை: திறக்க முயற்சி!

யாழ்ப்பாணம், டிச. 16

மக்கள் போக்குவரத்துக்காக ஆனையிறவுக்கு கிழக்கேயுள்ள ஊரியான் பாதையைத் திறக்கச் செய்யும் முயற்சியில் யாழ். அரச அதிபர் ஈடுபட்டிருப்பதாக அறியவருகிறது.

இது குறித்து யாழ். அரச அதிபர் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களை நேற்றுச் சந்தித்துப் பேசியதாகவும் —

ஊரியான் பாதையைத் திறக்க இச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் இணக்கம் தெரிவித்ததாகவும் அறியவந்தது.

ஊரியான் பாதையில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து பின்வாங்கிச் சென்றால் மட்டுமே ஊரியான் பாதையைப் போக்குவரத்துக்குப் பாவிக்க முடியும் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக —

அரச அதிபர் மேற்கொண்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் அரசுடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

**மட்டக்களப்பில்**

## 'ஜெயகங்கா' நடவடிக்கையில் 2 ஆயிரம் படையினர்!

கொழும்பு, டிச. 16

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்காப் படையினர் ஆரம்பித்திருக்கும் "ஜெயகங்கா" இராணுவ நடவடிக்கையில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான துருப்புகள் ஈடுபட்டிருப்பதாகவும் —

இது தொடர்ந்து நேற்று நான்காவது நாளாக இடம்பெறும் இந்த நடவடிக்கையில் விமானங்களும் பயன்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருவேறு இராணுவத் தாக்குதலில் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

அம்பாறை, மட்டக்களப்புப் பகுதிகளில் முகாமிட் (5 ஆம் பக்கம் பார்க்க)

## மதத் தலைவர்கள் குழு ஜனவரியில் யாழ். வரும்

வடக்கு, கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முன்முயற்சியாக தெற்கிலிருந்து சமயத் தலைவர்கள் குழு ஒன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

"லங்காதீப" பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

சமயத் தலைவர்கள் தூதுக்குழுவினர் யாழ்ப்பாணம் புறப்படுவதற்கு முன்னர் மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிபெறுவர் என்றும் —

தூதுக்குழுவின் பிரயாண ஏற்பாடுகளையும், விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் மேற்கொண்டுள்ளதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## சடலம் கரை ஒதுங்கியது?

யாழ்ப்பாணம், டிச 16

நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கிளாலிக் கடற் பகுதியில் கடற்படையினர் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த படகோட்டி எனக் கருதப்படும் ஒருவரின் சடலம் நேற்று நண்பகல் 11 மணியளவில் கிளாலிக் கடலில் கரை ஒதுங்கியதாக அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

பொருள்களை ஏற்றுவதற்காக ஆலங்கேணி நோக்கிச் சென்ற படகு ஒன்று தவறுதலாக கறுக்காய்த்தீவுப் பக்கம் சென்றதாகவும் —

அவ்வேளை கடற்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படகோட்டி ஒருவர் உயிரிழந்ததாகவும் —

அவருடன் சென்ற மற்றைய படகோட்டி கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## திரியாயில் மோதல்

திருகோணமலை மாவட்டம் திரியாயில் 'முன்னேஷ்'' என்ற இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நேற்று மோதல் இடம் பெற்றதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன (உ-எ)

## ரூ. 28 கோடிக்கு 4 விமானங்கள்

ஆர்ஜென்ரீனாவிடமிருந்து ஸ்ரீலங்கா அரசு கொள்வனவு செய்யும் நான்கு 'புக்காரா' [illegible] விமானங்களின் [illegible] மொத்தப் பெறுமதி 28 கோடி ரூபா [illegible] பட்டுள்ளது. (உ-எ)

## முதலில் யுத்த நிறுத்தம் பின்னர் பேச்சுவார்த்தை

### அங்கிலிக்கன் ஆயர் வலியுறுத்து

கொழும்பு, டிச. 16

யுத்த நிறுத்தம் ஒன்றை பிரகடனம் செய்த பின்னர் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

— இவ்வாறு வலியுறுத்திக் கூறியிருக்கிறார் கொழும்பு புதிய அங்கிலிக்கன் ஆயர் அதி. வண. மைக்கல் கெனத் பெர்னாண்டோ.

கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பேச்சு மூலமே தீர்வு காணப்பட வேண்டும். அத்தகைய தீர்வு ஒன்றுக்காக அனைத்து மக்களும் வழிபாடு நடத்த வேண்டும்.

இலங்கை அங்கிலிக்கன் திருச்சபையின் தலைவர் என்ற முறையிலும் கொழும்பின் புதிய ஆயர் என்ற வகையிலும் இந்த நத்தார் காலத்தில் வடக்கு - கிழக்கு மோதல் குறித்து நான் விடுக்கும் செய்தி இதுவே.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுத் திட்டம் ஒன்றுடன் அங்கிலிக்கன் ஆயர் வருவார்

கொழும்பு, டிச. 16

அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் அதி. வண. மைக்கல் கெனத் பெர்னாண்டோ எதிர்வரும் 6 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்றை எடுத்து வருவார் என கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனவரி 6 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அவர், அச்சந்தர்ப்பத்தில் தாம் எடுத்துவரும் தீர்வுத் திட்டம் குறித்தும், யுத்த நிறுத்தம் ஏற்படுத்துவது குறித்தும் புலிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அங்கிலிக்கன் ஆயரின் யுத்த நிறுத்த முயற்சிகளுக்கு தெற்கில் பௌத்த, இந்து சமயத் தலைவர்களும் அரசியல் பிரமுகர்கள் பலரும் முழு ஆதரவு தெரிவித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் குறிப்பிட்டன.

வெளிநாட்டுத் தூதுவர்கள் பலரின் ஆதரவையும் அவர் பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

## யுத்த நிறுத்த முயற்சியில் உலக திருச்சபைக் கவுன்ஸில்

கொழும்பு, டிச. 16

வடக்கு, கிழக்கில் யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் உலக திருச்சபைக் கவுன்ஸில் ஈடுபட்டுள்ளது.

அங்கிலிக்கன் திருச்சபையின் புதிய ஆயர் அதி. வண. மைக்கல் கெனத் பெர்னாண்டோ கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இத்தகவலைத் தெரிவித்தார்.

தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்பதற்காக, பொறுப்பு வாய்ந்த முறையில் எமது திருச்சபை நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் முன் பல தடவைகள் பிரதிநிதித்துவம் செய்திருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் அக்கடமி

பருத்தித்துறை வீதி, நல்லூர்.

ஆண்டு 4, 5 (புலமைப்பரிசில்)

6, 7, 8, 9, 10, 11 ஆம் ஆண்டிற்கான

புதிய பிரிவு ஆரம்பம்: 19 - 12 - 1992

(23623) பிற்பகல் 3மணி



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கணக்கியல்: S. K. பிரபாகரன்

சனி, ஞாயிறு
வினா - விடை வகுப்புக்கள்

ஆரம்பம்: 19 - 12 - 1992
(4-30 — 6-00)

★ 92 ஆம் ஆண்டு பரீட்சை எடுத்த மாணவர் களின் நன்மை கருதி ஆரம்பமாகின்றது;

★ வாரத்தில் 8 மணித்தியாலம் நடைபெறும்;

(இ-2884)



யாழ். மிட் ரவுண் றோட்டரக்ற் கழகம் நடாத்தும்

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

நேரம்: 4. 00 மணி
இடம்: யாழ் மத்திய கல்லூரி

| | |
|---|---|
| 16-12-92 | பாடுமீன் எதிர் சென்றோக்ஸ் |
| 17-12-92 | சென்நீக்கிளஸ் எதிர் சென்மேரீஸ் |
| 13-01-93 | பாடுமீன் எதிர் பொற்பதி |
| 21-12-92 | சென்றோக்ஸ் எதிர் சென்மேரீஸ் |
| 22-12-92 | பாடுமீன் எதிர் சென்நீக்கிளஸ் |
| 27-12-92 | சென்நீக்கிளஸ் எதிர் சென்றோக்ஸ் |
| 28-12-92 | சென் அன்ரனீஸ் எதிர் பாடுமீன். |

(இ/4067)


# 31ஆம் நாள் ஆத்மசாந்தி நினைவஞ்சலியும், நன்றி நவிலலும்

மண்ணகம்:
21
—
05
—
1939

விண்ணகம்:
17
—
11
—
1992



அமரர்

## செல்லையா கணபதிப்பிள்ளை

(கணக்குப் பிரிவு, C. T. B., வவுனியா)

அன்புடனும், பாசத்துடனும் எம்மை எல்லாம் வளர்த்து, சிறப்புடன் வாழ வழி காட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் துதிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்ற எங்களுக்கு, பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்தோடு நாளை (17-12-1992) வியாழக்கிழமை அன்னாரது வீட்டில் நிகழவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எல்லோரையும் குறிப்பாக சகஊழியர்களையும் (C. T. B.) கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி:

தாயார், மைத்துனி,
பெறாமக்கள், மருமக்கள்,
பேர்த்திமார்.

விஜயன்ஸ் ரான்ஸ்போட் சேவிஸ்,
சரசாலை.

(23657)

# தெரிவுக்குழு கூட்டங்களில் நடந்தது என்ன?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதற்கு என நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் கடைசிக் கட்ட அமர்வுகளின்போது இடம் பெற்ற அரசியல் நிகழ்வுகள் சிலவற்றை "சண்டே ரைம்ஸ்" தொகுத்து வெளியிட்டிருக்கிறது.

விவரம் வருமாறு:

### நவம்பர் 26

அன்றைய கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப்பட்டது. கூட்டம் ஆரம்பித்ததும் தலைவர் மங்கள முனசிங்க ஒரு தகவலை வெளியிட்டார்.

"ஸ்ரீநிவாசன் சமர்ப்பித்த வடக்கு-கிழக்கு இணைப்பற்ற சமஷ்டி அரசமைப்பு யோசனையை தானும் தமது கட்சியும் ஆதரிப்பதாக சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தொலைபேசி மூலம் என்னிடம் தெரிவித்தார்" இதுவே மங்கள முனசிங்க வெளியிட்ட தகவல்.

இதுதான் சுதந்திரக் கட்சியின் கருத்து என்றால் ஸ்ரீநிவாசன் யோசனையை தமது கட்சியும் ஆதரிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அமைச்சர் ஹமீது தெரிவித்தார்.

அக்கூட்டத்தில், தமிழ்க் கட்சிகள் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும்படி மங்கள முனசிங்க கேட்டுக் கொண்டார். தமிழ்க் கட்சிகளில் பல அன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

நிரந்தர இணைப்புடன் கூடிய நான்கு அம்சத்திட்டத்தையே வலியுறுத்துவதாக தமிழ் எம்.பி ஒருவர் தெரிவித்தார்.

ஆளும் கட்சி எம்.பியான ஏ. எச். எம். அஸ்வர் எழுந்து "இணைப்பு கைவிடப்பட்டால்தான் சமஷ்டி அரசமைப்பு ஏற்றுக்கொள்ளப்படும்" — என்று சொன்னார்.

### சிறிமாவோ மறுப்பு

(நவம்பர் 26) அன்று மாலை முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரஷ்கோத் ராவுக்கு இந்தியத் தூதரகத்தில் விருந்துபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை இந்தியச் செய்தியாளர்கள் சந்தித்து சமஷ்டி பற்றிய சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டைக் கேட்டனர்.

ஸ்ரீநிவாசனின் யோசனைகளில் உள்ள சில அம்சங்களை சாதகமாகப் பரிசீலனை செய்வதாக மட்டுமே தான் மங்கள முனசிங்கவிடம் தெரிவித்ததாகவும் —

சமஷ்டி பற்றி தான் ஒன்றுமே கூறவில்லை என்றும் சிறிமாவோ தெரிவித்தார்.

உடனே இந்தியச் செய்தியாளர்கள், விருந்தில் கலந்து கொண்ட மங்கள முனசிங்காவை நோக்கிப் படை எடுத்தனர். சமஷ்டி யோசனையை ஏற்பதாக சிறிமாவோ தம்மிடம் தெரிவித்தார் என்பதை மங்கள முனசிங்கா மீண்டும் அப்போது வலியுறுத்தினார்.

### டிசம்பர் 3

தெரிவுக்குழு அன்றைய தினம் கூடியபோது, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது வெகு தொலைவில் உள்ளது என்ற செய்தி வெளியானது.

ஸ்ரீநிவாசன் யோசனை பற்றிய தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டை குழுத் தலைவர் வினாவினார்.

அப்போது, நிரந்தர இணைப்பைக் கைவிட்டால் சமஷ்டியை ஏற்றுக்கொள்ள முடியும் என்று அரச எம். பி. ஒருவர் குறுக்கிட்டுச் சொன்னார்.

அதற்கு ஈ. பி. ஆர். எல். எவ்வின் எம். பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் "நிரந்தர இணைப்புக் கோரிக்கையை நாம் கைவிடோம்" என்று பதிலளித்தார்.

தற்காலிக இணைப்பை ரத் ... என்று அரச எம். பி. ஒருவர் தெரிவித்ததற்கு, கூட்டணி எம் பி. மாவை சேனாதிராஜா "அவர் எங்களுடையவர் அல்லர், அவர் அரசாங்கத்தில் உள்ளவர்" என்று பதிலளித்தார்.

ஐ. தே. கட்சியைச் சேர்ந்த எம். பி. அஸ்வர், அக்கூற்று வாபஸ் வாங்கப்படவேண்டும் என்றார். முடியாது என்று சொன்னார் மாவை சேனாதிராஜா.

பதற்றத்தைத் தணிக்குமுகமாக, வகுப்பறையில் ஆசிரியர் நடப்பது போன்று, இணைப்புக்கு எதிரானவர்கள் கைகளை உயர்த்தும்படி தலைவர் மங்கள முனசிங்க கேட்டார். ஏராளமான எம் பிக்கள் கைகளை உயர்த்தினர்.

இப்படியான பிரச்சினைகளுக்கு ஒருவரிப் பதிலைப் பெறமுடியாது என்று பிரேமச்சந்திரன் எம். பி. சொன்னார்.

### தொண்டமான்

இக்கூட்டத்தில் அமைச்சர் தொண்டமான் தலையிட்டு, "எனது ஆதரவு வீ தமிழ்க் கட்சிகள் சமர்ப்பித்த நான்கு அம்ச யோசனை ஏன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை" — என்று கேட்டார்.

"புதிதாக ஒன்றைக் கொண்டு வந்து எம்மீது திணிக்க முடியாது. 4 அம்சத் திட்டத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்" — என்று தொண்டமான் வலியுறுத்தினார்.

அது ஒரு நியாயமான நிலைப்பாடு என்று, அனுரா பண்டாரநாயக்காவும் தினேஷ் குணவர்த்தனாவும் ஆதரித்தனர்.

நான்கு அம்ச யோசனையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள உடனே தீர்மானிக்கப்பட்டது. அது விவாதத்துக்கு எடுக்கப்பட்டதும் இணைப்பு விசயம் மீண்டும் விவாதிக்கப்பட்டது.

அனுரா குறுக்கிட்டு, "இணைப்பு அம்சத்தை பின்னர் விவாதிக்கலாம். ஏனைய மூன்று அம்சங்களையும் முதலில் பரிசீலனை செய்வோம்" — என்றார்.

அப்போது பதற்றம் ஏற்பட்டது; அமைதியை நிலைநாட்டியதும், "ஸ்ரீநிவாசன் யோசனை"களை நிராகரிக்கும் தமது தீர்மானத்தை தமிழ்க் கட்சிகள் உத்தியோகபூர்வமாக தெரிவுக் குழுவிடம் கையளித்தன. அந்தக் கூட்டத்தில் டிசம்பர் 7க்கு தெரிவுக் குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

### டிசம்பர் 7

தெரிவுக்குழு மீண்டும் அன்று கூடியதும், சட்டம் — ஒழுங்கு, நாணயம், ராணுவம் ஆகிய அம்சங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டன.

இவ் விஷயங்கள் குறித்து ஏற்கனவே விவாதிக்கப்பட்டு கருத்துடன்பாடு காணப்பட்டுள்ளது. அக்கருத்துடன்பாட்டு முடிவுகளை எழுதிச் சமர்ப்பித்த பின்னரே, தெரிவுக்குழுவின் அன்றைய அமர்வு தொடரவேண்டும் என்று பிரேமச்சந்திரன் கூறினார்.

தெரிவுக்குழு மறுநாள்வரை ஒத்திவைக்கப்பட்டது.

### டிசம்பர் 8

அன்றைய தினம் தமிழ்க் கட்சிகள் சமர்ப்பித்த 4 அம்ச யோசனையை தெரிவுக்குழு பரிசீலனை செய்தது. காணிப் பிரச்சினை குறித்து அறிக்கை ஒன்றையும் தெரிவுக் குழு அன்று சமர்ப்பித்தது.

சட்டம் — ஒழுங்கு பற்றிய விஷயத்தில் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்திற்கு மேலாக எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்று அரச எம். பிக்கள் கருத்து வெளியிட்டனர்.

13 ஆவது திருத்தம் முழு நடத்தப்படவே இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இவற்றை எல்லாம் அவதானித்துக் கொண்டிருந்த அமைச்சர் தொண்டா, "நான் முதலில் சமர்ப்பித்ததும் அதனால் நாட்டில் பரபரப்பை உண்டாக்கியதுமான யோசனைகள் ஏன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை?" — என்று கேட்டார்.

உடனே, ஆளும் கட்சி எம். பி. ஒருவர், தொண்டமானின் அந்த யோசனைகள் குறித்து தமிழ்க் கட்சிகளின் நிலை என்ன என்று கேட்

(5 ஆம் பக்கம் பார்க்க)


வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்

# 1993 ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

1993ஆம் ஆண்டிற்கான சுன்னாகம் மாட்டிறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக்கடை ஆகியவற்றை குத்தகைக்கு விடுவது சம்பந்தமாக 12-11-92 ஆம் திகதிய "உதயன்" பத்திரிகையில் வெளியான கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கமைவாக, கீழ்க்குறிப்பிட்ட விபரப் பிரகாரம் கேள்விப்பத்திரம் வழங்கல், கேள்விகள் ஏற்றல், கேள்விகள் திறத்தல் ஆகியவற்றின் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விப் பத்திரம் வழங்கல்:-
1992-12-21 ஆம் திகதி 12-00 மணிவரை

கேள்விகள் ஏற்றல்:-
1992-12-22 ஆம் திகதி மு. ப. 10-00 மணிவரை

கேள்விகள் திறத்தல்:-
1992-12-22 ஆம் திகதி மு. ப. 11 மணி

செல்வி தனுஜா தணிகாசலம்
விசேட ஆணையாளர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம். 15-12-92

(சி/2526)


# உணர்வு பூர்வமான கண்ணீர் அஞ்சலி

## செல்வன், சி. யோகநாதன்

13 - 12 - 1992 அன்று அகால மரணமடைந்த யாழ். பல்கலைக்கழகச் சித்த மருத்துவ மாணவன் செல்வன் சி. யோகநாதன் அவர்களுக்கு எமது

## கண்ணீர் அஞ்சலிகள்

பி. எஸ். எம். எஸ்
பட்டதாரி நண்பர்கள்

(5453)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்தீர்வு என்றால் இனக்கொலையாகவே முடியும்

## தொண்டா பேட்டி

கொழும்பு, டிச. 16

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணுவது என்பது இனக்கொலையாகத்தான் முடியும். அரசியல் தீர்வு ஒன்றே சரியான மார்க்கம்.

அமைச்சர் தொண்டமான் "சண்டே டைம்ஸ்"க்கு அளித்த பேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுகள் நடத்தப்படவேண்டும் என்பதை இன்னும் வற்புறுத்துகிறீர்களா? என்று கேட்டதற்கு—

"பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் எமது மிகவும் மோசமான எதிரியுடன் கூட நாம் பேச வேண்டும். பேச்சுவார்த்தையே ஒரே வழி' என்றும் அவர் கூறினார்.

கேள்வி: இணைப்புடன் அல்லது இணைப்பு அற்ற சமஷ்டி அரசமைப்பு தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக சமர்ப்பிக்கப்படுவதை நீங்கள் நிராகரிக்கின்றீர்களா?

தொண்டா: ஆம்; நான் நிராகரிக்கின்றேன். சமஷ்டி யோசனையை நாம் முட்டாள்தனமாக ஏற்றால் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலச் சந்ததியினர் எம்மைப் பார்த்து எள்ளி நகையாடுவார்கள்.

சமஷ்டி முறைக்கு தமிழர்கள் 'ஆம்' என்று தலையாட்டினால் தமிழ் மக்கள் ஏமாற்றப்படுவார்கள் என்று நான் உணருகின்றேன்.

யூகோஸ்லேவியா, சோவியத்யூனியன் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் சமஷ்டி முறைக்கு ஏற்பட்ட தோல்வியினால் உண்டான பாதிப்பினால் நான் இப்படிக் கூறவில்லை. எமது சொந்த நாட்டில் ஏற்பட்ட அனுபவங்களை வைத்து நான் இப்படிக் கூறுகின்றேன்.

1940களில் சமஷ்டி யோசனை பற்றி எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறிய போது, ஒருவரும் அதனைத் தீண்டவில்லை.

1972, 1978 ஆம் ஆண்டுகளில் அரசமைப்பைத் தயாரித்தவர்கள் சமஷ்டி பற்றி சிந்தித்தார்களா? இல்லை. சமஷ்டி இலட்சியத்துக்கு எதிராக பிரசாரமே நடத்தப்பட்டது. இப்போது திடீரென சமஷ்டி ஏற்றுக்கொள்ளப்படுவது ஏனோ?

ஸ்ரீநிவாசனின் சமஷ்டி யோசனையை அரசாங்கம் ஆதரித்தாலும் சர்வசனவாக்கெடுப்பு பற்றி என்ன கூறப்படுகின்றது. 50 ஆண்டுகளாக சமஷ்டியை நிராகரித்து வந்த மக்கள் இப்போது அதனை ஏற்றுக்கொள்வார்களா? சமஷ்டிக்கு எதிராக அரசியல் ரீதியில் வளர்க்கப்பட்டு வந்த மக்கள் அதனைக் கண்டித்து தாக்கி எறிவர்.

சமஷ்டியை தமிழ் மக்களே இன்று பாரதூரமாக எப்படி எடுத்துக் கொள்ளலாம் என்பதே என்னைக் குழப்புகின்றது.

சமஷ்டி யோசனையை நான் ஏற்கமாட்டேன். சமஷ்டி ஒரு தீர்வாகாது. அதனால் அமைதியைக் கொண்டு வரமுடியாது.

இப்படி தொண்டமான் கூறினார். (ஒ-எ)

## கட்டடத் தொழிலாளருக்கு மூன்றாம் கட்ட நிவாரணம்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சிமெந்துக் கட்டடத் தொழிலாளர்களுக்கு மூன்றாம் கட்ட உலர் உணவு இனாமாக வழங்கப்படுகின்றது.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 25 கிராமசேவை அலுவலர் பிரிவிலும் பாதிக்கப்பட்ட சுமார் ஆயிரம் சிமெந்துக் கட்டடத் தொழிலாளர்களுக்கு மூன்றாவது தடவையாக நிவாரணம் வழங்கப்படுகின்றது. உதவி அரசாங்க அதிபரின் முயற்சியால் இந்த நிவாரணம் சமாசமாசம் ம. நோ. க. சங்கங்கள் மூலம் தற்போது விநியோகிக்கப்படுகின்றது. (ந-175)

## பாலர் பாடசாலை திறப்பு விழா

சாவகச்சேரி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தினரால் மீசாலை மேற்கில் பாலர் பாடசாலை ஒன்று இன்று புதன் காலை 10-30 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது.

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. தி. சபாரத்தினம் பாடசாலையைத் திறந்து வைப்பார்.

விசேட விருந்தினராக தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சுதன்னா கலந்து கொள்வார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஒ-117)

## அலுவலகம் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இயங்கி வந்த சிறுவர் நன்னடத்தை பராமரிப்பு நிலைய அலுவலகம் யாழ். செயலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ஒ-100)

## ஐ. தே. க. வருடாந்த மாநாடு:

## பிற அரசியல் கட்சிகள் கலந்துகொள்ள பின்னடிப்பு

கொழும்பு, டிச. 16

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் 38 ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே இதுவரை சம்மதம் தெரிவித்துள்ளது.

ஏனைய அரசியல் கட்சிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்வதுபற்றி இன்னும் தமது பதிலைத் தெரிவிக்கவில்லை. மாநாட்டில் கலந்து கொள்ளப்போவது இல்லை என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

தம்மீதும் தமது கட்சி மீதும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பொதுசனத் தொடர்பு சாதனங்கள் கடும் தாக்குதல்களை நடத்தி வருவதன் காரணமாகவே தாம் இம்மாநாட்டில் கலந்து கொள்ளப் போவது இல்லை என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் ஐ. தே. க. பொதுச் செயலாளர் சிறிசேனகூரேக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

ஏனைய அரசியல் கட்சிகளின் மாநாடுகளில் கலந்து கொள்வதில்லை என்ற கொள்கை காரணமாகத் தமது கட்சி இம்மாநாட்டில் கலந்து கொள்ள முடியாது இருப்பதாக லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் ஷாணக்கு அமரதுங்க தெரிவித்துள்ளார்.

மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கவில்லை என்று கூட்டணிப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-எ)

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் யோகலிங்கம் ராதுஷன்

திரு. திருமதி யோகலிங்கம் - லத்தா தம்பதிகளின் செல்வப் புதல்வன் ராதுஷன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று 16 - 12 - 1992 இல் வெகு சிறப்பாக Canada (Montreal)வில் கொண்டாடுகின்றார்.

இவரை Canadaவில் வசிக்கும் அப்பா, அம்மா, மாமா, அப்பம்மா, யாழ்ப்பாணத்திலுள்ள அம்மம்மா, பூட்டி, சித்திமார், இரட்டைகோபால் அப்பப்பா, அம்மம்மா, France இல் உள்ள சித்தப்பா, சித்தி, கொழும்பில் உள்ள சித்தி, Toronto இல் உள்ள சித்தப்பா, சித்தி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் கண்ணனின் அருள்பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

நா. தவமணி,
(அம்மம்மா)

18, கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம். (23641)

---

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
### யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## தைத்த ஆடைகள் கண்காட்சியும் பரிசு வழங்கலும்

மேற்படி கண்காட்சி எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் (காலை முதல் மாலை வரை) சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 23ஆம் திகதி மாலை எமது பயிற்சி மாணவிகள் தைத்த ஆடைகள் விற்பனையும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர்களுக்கான பரிசுகளும் அங்கு வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 977 | 4ஆம் பரிசு | 34 |
| 2ஆம் பரிசு | 608 | 5ஆம் பரிசு | 965 |
| 3ஆம் பரிசு | 1730 | | |

- கௌரவ செயலாளர்.

78, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
15 - 12 - 1992 (கி-4006)

---

## அரசாங்க கேள்வி மீளக் கோரல்
### சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

1993 ஆம் ஆண்டுக்கு பின்வரும் அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் மீளக் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரங்கள் 22 - 12 - 1992 நண்பகல் 12-00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 23 - 12 - 1992 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு, திறக்கப்படும். கேள்விதாரர் விரும்பினால் அச்சமயம் சமுகமளிக்கலாம்.

கேள்வி மீளக் கோரப்படும் நிறுவனங்கள் பின்வருமாறு:-

1. ஆ. ம. வை. ம., அம்பன்
2. ம. ம. வை. ம., தர்மபுரம்
3. ம. மா. வை. ம., மானிப்பாய்
4. மா. ம. வை. ம., உருத்திரபுரம்

வைத்திய கலாநிதி
பொ. இரத்தினசபாபதி,
சுகாதார சேவைகள் பிராந்திய-
பணிப்பாளர்

சுகாதார சேவைகள் பிராந்திய-
பணிப்பாளர் பணிமனை,
இல. 59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
15 - 12 - 1992

---

# THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY

Graduates / Postgraduates are requested to apply for the above fellowship giving their bio-data and research proposal in plant tissue culture and genetic engineering. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. A monthly allowance of Rs 2,500/-shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by reapplying for the fellowship The fellowship may be terminated at any time if the project is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.

The closing date for applications will be 1992-12-28.

-REGISTRAR.

University of Jaffna
1992-12-14. (C-3996)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | சிவபதம் |
|---|---|---|
| 12 — 12 — 1919 |  | 28 — 12 — 1991 |

### திருமதி பொன்னுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை
(விழிசிட்டி, வித்தகபுரம் - தெல்லிப்பழை)

திதி: 16 — 12 — 1992

வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட அம்மையாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!
ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

டாக்டர் சி சதாசிவம்,
(மகன்)
சித்தன்கேணி. (5483)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யமுனா பாரி இராய் குட்டி கொண்டாவில் பஸ் டிப்போவிலிருந்து 800 யார் தூரத்திலுள்ள உடும்பராய் தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அடுத்து உள்ள காணியில் இருந்து வீட்டுத்திட்டத்தில் திரு. சிவலிங்கத்தை தொடர்பு கொள்ளவும்.
(5650)

## கலர்பிலிம் பிறின்ரிங்

நியாய விலையில், துரித கதியில் கலர் பிலிம்களை பிரதிபாக்கம் செய்ய நாடுங்கள்: குயிக் போட்டோ, மணிக்கூட்டு வீதி, (எழிலைத் துக்கு அருகாமை) யாழ்ப்பாணம்
(5644)

## இற்றார் தேவை

பாவிக்கக்கூடிய நிலையில் உள்ள Box இற்றார் தேவை; தொடர்பு: சத்தியன், 978, மருத்திற்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அல்லது வி. பஞ்சலிங்கம், 101/1, செல்லர் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்
(23647)

## இலவச திருமண சேவை

40 வயது, பூசம், அரச விலிருக்கு ஏற்ற மணமகள் தேவை. அரச/தனியார்துறை விரும்பத்தக்கது. சகல தரமுள்ள மணமக்கள் உண்டு. ஆ. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி.
(23636)

சைவ வடுகை 30 வயது. இறிக்கை (Non R/C) ஆகிலைக்கு ஏற்ற மணமகன் தேவை. சீதனம் வழங்கப்படும். தொடர்பு: ஞானபிரகாசமலர் ஆ. விமலா, யாழ் நாச்சிமார் கோவிலடி.
(23637)

## தவறிவிட்டது

12-12-92 இல 810670162V இலக்க அடையாள அட்டை மற்றும் பத்திரங்களுடன் காசுப்பை நாவலர் வீதியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 65, (பழைய) பருத்தித்துறை வீதி, நுழைவாயிலில் இருக்கும் தபால் பெட்டியில் போடும்படி கேட்டுக் கொள்கின்றேன்.
(23655)

பரயலிக்கல் சரவணபிள்ளை என்பவரின் அடையாள அட்டை முக்கியமான ஆவணங்கள் அடங்கிய பிரயாணப்பையை யாழ் பஸ் நிலையத்தில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை விசாரணைப் பிரிவில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்
(5651)

## 6 ஜெனரேட்டர்

யாழ் குருநிலை அண்டியுள்ள தீவுகளுக்கு மின்சாரம் விநியோகிப்பதற்காக ஆறு ஜெனரேட்டர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளன

இத்தகவலை அத்தியாவசிய சேவைகள் மேலதிக ஆணையாளர் ஜனாப் எம். ஐ. எம். ரபீக் தெரிவித்தார்;

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 03 — 05 — 1931

உதிர்வு: 16 — 11 — 1992

## திருமதி இரத்தினம் தங்கம்மா

உற்றார், உறவினர் ஒன்றாய்க் கலங்கிட
மற்றோர் எல்லோரும் மயங்கி ஏங்கிட
சங்கம் போற்றிட. நாணி கலங்கி அழுதிட
எம் தாயே! தங்கமே எங்கு சென்றாய் அம்மா!
அழுத நெஞ்சு ஆறவில்லை அம்மா!
இனி எப்பிறப்பில் காண்போம் அம்மா!

அன்னாரின் இல்லத்தில் இன்று [16-12-1992] புதன்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்.

மிஷன் பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.
[23658]

# 31ஆம் நாள் நீங்கா நினைவு



மண்ணில்: 25 — 04 — 1968

விண்ணில்: 16 — 11 — 1992

பொன்னில்லம்

## திருமதி சசிகலா சிவசெல்வநாதன்

மின்னும் தனி வைரம் மிகவுயர்ந்த வண்புருவம்
பொன்னில்லம் ஒளிகாணப் பிறந்த ஒளிவிளக்கு!
அன்புச் சசிகலா!
ஆடி அடங்கிவிட்ட அழகியதோர் பம்பரமே!
வாடி வதங்கிவிட்டு வல்லான் அடிதேடி
ஓடினையோ! உள்ளம் உருகுதம்மா!
உன் ஆத்மா சாந்திபெற இறையடி பணிகின்றோம்!

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர்க்கு நன்றி தெரிவிப்பதுடன், இன்று (16-12-92) புதன்கிழமை காலை நடைபெறவுள்ள 31 ஆம் நாள் நீங்கா நினைவு நிகழ்வில் கலந்து சிறப்பிக்கக் கோருகின்றோம்.

கணவன்: சி. சிவசெல்வநாதன்;
மகன்: சி. விதுர்ஷன்.

"பொன்னில்லம்"
சரவெட்டி கிழக்கு,
சரவெட்டி.
[23643]

# நாவலர் கல்விக் கழகம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்,

## SPOKEN ENGLISH
(WITH GRAMMAR)

By - R. Sivalingam.

ஆரம்பம்; 18 - 12 - 1992

வெள்ளி மாலை 4—00 மணி

★ 25 மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள்.
(இ-3998)

# ஐந்தாவது ஆண்டு நினைவஞ்சலி

## சொர்ணலிங்கம் டினேஸ்குமார்
(குட்டிக்கண்ணா)

தோற்றம்: 16—08—1986

மறைவு: 16—12—1987

நீலவண்ணன் வேண்டுதலில்
நின்மலனே உனைப்பெற்றோம்
நீண்டநாள் வாழ்வில்லை
என்றெமக்கு உணர்த்திச் சென்றாய்
அண்மைவு பெற்றெடுத்தோம் - ஆறுதலும்
அடைந்திருந்தோம் ஆறாத்துயரில் விட்டு
நிமலனை நீ அடைந்து விட்டாய்!
ஆண்டு ஐந்து சென்றபோதும் துயரமதை
சுமக்கின்றோம் எம்துரை நீக மீண்டும்
ஓடிவந்து பிறந்திடுவாய் எம் வயிற்றில்!

உன் ஆத்ம சாந்திக்கு இறைஞ்சும்,

அப்பா, அம்மா, சகோதரிகள், அச்சாப்பா, அச்சாம்மா (சதாசிவம் குடும்பத்தினர்) அப்பப்பா, அம்மம்மா (சண்டிலிப்பாய் கனகரத்தினம் குடும்பத்தினர்), மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா மற்றும் உறவினர்கள்.

சந்தை மேற்கு ஒழுங்கை,
மாவிட்டபுரம்.
[23654]

# 3ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## நடராஜா சந்திரராஜா (போஸ்)
(குவன் கிரோஸ் உரிமையாளர், தலவாக்கொல்லை)

தோற்றம்: 20 — 02 — 1948

மறைவு: 19 — 12 — 1989

திதி: 16 — 12 — 1992 (புதன்கிழமை)

அன்பின் ஆருயிர் அப்பாவே! எங்களை தங்கள் திருமுகம் காணாது தவிக்கும் எங்களை! இளவயதில் எம்மை விட்டுப் பிரிந்து இறையடி சேர்ந்தீர்களே! ஈட்டியாக் புண்பட்ட எம்மனதை தேற்ற உத்தமனாய், எந்நாளும் எங்கள் வாழ்க்கை பாதையை வரைந்து, வழிகாட்டி எமக்கு என்றும் துணையிருப்பீர்கள் என்றிருக்க, எனி மிகுதி பாதி வாழ்க்கையை துன்பச் சுமையாக்கி விட்டு ஏர் பூட்டுகின்ற எருது போல் யம தூதர் வர நிம்மதியாய் சென்றீர்களோ! ஐயகோ என்று தவிக்கும் எங்களுக்கு தங்கள் திருமுகத்தை ஒவ்வொரு நிமிடமும் மீட்டுப் பார்க்கும் நினைவலைகளை ஓசோ என்று கற்பனையில் மிதக்கவிட்டு இனி தங்கள் வாழ்வில் ஒளடதமும் வேண்டாம் என்று இறையடி சேர்ந்தீர்களோ!

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்,

திருமதி எஸ். சந்திரராஜா,
பிள்ளைகள்: தினேஷன், சிவருஜா.
நிஷாந்.

பலாலி வீதி,
கோண்டாவில்.
[5646]

# சாவகச்சேரி பிரதேசசபை
## கேள்வி அறிவித்தல்

07-11-1992ஆம் திகதி உதயன் பத்திரிகையில் வெளியான எமது விளம்பரத் திற்கமைவாக பின்வரும் இடங்களில் தற்காலிகக் கடைகளை அமைத்து இறைச்சி வியாபாரம் செய்வதற்கான கேள்விகள் 28-12-1992 பி ப 2 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒவ்வொரு கடைக்கும் கேள்விப்பிணை ரூபா 250/-ம், மீளளிக்கப்படாத பத்திரப்பணம் ரூபா 100/-ம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை 24 12-1992 மு. ப 10 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அறிந்து கொள்ளவும்.

| 1 மாட்டிறைச்சிக்கடை | | 2. ஆட்டிறைச்சிக்கடை | |
|---|---|---|---|
| இடம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | இடம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
| 1. மண்டிதர் குடியிருப்பு | 2,000/- | 1. எழுதுமட்டுவாள் சந்தை | 1,000/- |
| 2. மட்டுவில் தெற்கு, மகிழடி | 2 000/- | 2. நாவற்குழி | 2,000/- |
| 3 கனகம்புளியடி, சரசாலை | 2 000/- | 3. வரணி | 2,000/- |
| 4. மந்துவில் | 2,000/- | 4. கருவாட்டுக்கடை கொடிகாமம் சந்தை | 2,000/- |

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். 10-12-1992

பு. சுந்தரம்பிள்ளை,
செயலாளர்.
(இ-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பட்டிகள் அவர்களுக்கே!

நாடாளுமன்றத் தெரிவுக் குழு, தமிழர்கள் எதிர்பார்த்தது போலவே எவ்வித விளைவும் தராமல் வாடிச் சருகாகிப் போயிற்று. தமிழர்களின் அரசியல் அபிலாசைகளுக்கு சற்றுக் கிட்டவும் நெருங்காத, அவர்களின் உரிமைகளை நசுக்கும் தீர்வு ஒன்றை வகுத்துத் தனது கதையை முடித்துக் கொண்டுள்ளது!

சிங்களவர்களுடன் சேர்ந்திருந்து தமிழர்கள் எந்த உரிமைகளையும், நலன்களையும் பெறமுடியாது என்பது மீண்டும் ஒரு முறை நிரூபிக்கப்பட்டுள்ளது. அவர்களுடன் போராடித் தான் தமிழர்கள் தமது சுதந்திரத்தையும், தாயகத்தையும் மீள்விக்க முடியும் என்பதைச் சிங்களத் தலைவர்கள் இன்னும் ஒருமுறை உணர்த்தியுள்ளார்கள்.

தமிழர்களின் தலைவர்கள் என்று வந்தவர்களில் சிலரும் சிங்கள அரசுகளுடன் சேர்ந்து ஒத்துழைத்து தமிழர்களது உரிமைகளைப் பெறலாம் என்று நம்பி ஏமாந்தார்கள்; தங்கள் பதவி ஆசைகளினால் தமிழர்களைக் காட்டிக் கொடுத்தார்கள்; ஏமாற்றினார்கள். அந்த ஏமாற்றும், துரோகமும் மீண்டும் ஒருமுறை அரங்கேற்றப்பட்டுள்ளன!

தமிழர் விடுதலைக்கூட்டணி தொடக்கம் ஈ. பி. ஆர். எல். எவ். வரையும் தமிழர்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்றியிருக்கின்றன. பழைய தமிழ்த் தலைவர்களைச் சிங்களத் தலைவர்கள் எப்படி எப்படி எல்லாம் ஏமாற்றினார்கள் என்ற சரித்திரம் தெரிந்தும் சிங்கள அரசை நம்பி சமபலமற்ற நிலையில் பேச்சுவார்த்தைக்குப் போனார்கள். பிரேமதாசாவின் பொறிக்குள் விழ்ந்து இப்போது உயிர்போகும் நிலையில் இருக்கிறார்கள். அந்தத் தருணத்தில்தான் அவர்களுக்கு ஞானம் பிறந்திருக்கிறது.

இனப்பிரச்சினைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட சமாதானத் திட்டம் ஒரு கேலிக் கூத்து. சமாதானத் திட்டம் என்ற பெயரில் வேண்டாத தீர்வுகளை பெரும்பான்மைச் சிங்கள இனம் எம் மீது திணித்துள்ளது. தெரிவுக்குழு எம்மைக் காட்டிக் கொடுத்த துரோகக் குழுவாகி விட்டது— என்று தமிழ்க்கட்சிகள் ஓலம் வைத்துள்ளன;

சிங்களவர்கள் எப்போதும் தமக்குச் சாதகமான தீர்வுகளையே தமிழர்கள் மீது திணிக்க முயன்றது இவர்களுக்குத் தெரியாதா? தமிழர் விவகாரத்தை எப்போதும் கேலிக் கூத்தாகவே கருதுகிறார்கள் என்பதை முன்னரே உணரும் தன்மை இந்தத் தலைவர்களுக்கு இல்லாமற் போயிற்றா? தெரிவுக்குழு தமிழர்களின் துரோகக் குழுவாக மாறும் என்பதைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அறிந்திருந்தார்கள். பதவி ஆசை வசதியான வாழ்க்கை, சுகபோகம் என்பன கண்ணை மறைத்ததால் கொழும்புத் தமிழ்க் கட்சிக் காரர்களால் அதனை உணர முடியாமற் போய்விட்டது!

தமிழர்களின் உரிமைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்து வரும் வேளையில், சிங்களத் தலைவர்களின் வலையில் சிக்குண்டு, உரிமைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்த முனைந்த கொழும்புத் தமிழ்த் தலைவர்கள்தான் துரோகிகள். அதனை விடுத்து தெரிவுக் குழுவை துரோகக்குழு என்றுகூறுவது, தமது தவறை இன்னொருவர் தலையில் போடும் வேலையாகும்.

தமிழர்களைப் பொறுத்த வரையில், கேலிக்கூத்தாடியவர்களும், துரோகம் புரிந்தவர்களும், சுயநலத்தின் பால் சிங்களத் தலைவர்களுடன் கைகோர்த்து நின்றவர்களும் அவர்கள் ஏறி மிதிக்கக்கூடிய பலவீனமான நிலையில் பேச்சுக்குப்போன கொழும்புத் தமிழ்த் தலைவர்களும் தம் மீது தாங்களே கட்ட வேண்டிய பட்டிகளை சிங்களத் தலைவர்கள் மீது கட்ட முனைவதால் ஆகப்போவது ஒன்றுமில்லை.

# புலிகள் பேச்சுக்கு அழைத்திருப்பது
# இன நெருக்கடியில் புதிய பரிமாணம்

'சண்டே டைம்ஸ்' (13-12-92) வார இதழில் அரசியல் செய்தியாளர் எழுதிய விமர்சனக் கட்டுரையில் இருந்து சில பகுதிகள் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

இனநெருக்கடிக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் முட்டுக்கட்டை நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது—

அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் உத்தியோகபூர்வமாக அறிவித்திருப்பது இனநெருக்கடிக்கு புதிய பரிமாணத்தைச் சேர்த்துள்ளது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கொழும்பில் நடந்துவந்த பேச்சுகள் முடிவடைந்த பின்னர், பேச்சுகளைத் தொடருவது குறித்த திடமான அழைப்பு ஏதும் விடுதலைப் புலிகளிடமிருந்து கிடைக்கவில்லை.

உத்தியோகப்பற்ற தொடர்புகள் இருதரப்பினருக்கும் இடையே இருந்தன என்று வதந்திகள் தாம் நிலவின.

சில மாதங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்து பணியவைக்கலாம் என்ற அதீத நம்பிக்கையுடன் கூடிய சாத்தியக்கூறுகள் இருந்தால், பேச்சுவார்த்தை குறித்து பேசப்படவே இல்லை;

அந்தக் கட்டத்தில்தான் சில மாதங்களில் யுத்தம் முடிவுக்கு வந்துவிடும் என பகிரங்கமாக அறிவிக்கப்பட்டது

#### அரசாங்கத்தின் தந்திரோபாயம்

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடித்த பின்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழு காணும் அரசியல் தீர்வு ஒன்றை ஏற்கும்படி விடுதலைப் புலிகளை நிர்ப்பந்திக்கும் தந்திரோபாயம் ஒன்றையே அரசாங்கம் அப்போது கடைப்பிடித்தது.

டென்ஸில் கொப்பேகடுவவும் மற்றும் 9 படை உயர் அதிகாரிகள் — யாழ் மீதான 'ஒப்ரேஷன் பைனல் கவுண்ட் டவுண்' இராணுவ நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு 48 மணித்தியாலங்கள் முன்பதாக)— அராலியில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து இராணுவ ரீதியிலான வெற்றி என்ற நம்பிக்கை' மறைந்து போயிற்று.

அன்று தொடக்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. படையினரின் மனோபலத்தைக் குறைக்கச் செய்யும் விதமாக படையில் இருந்து பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் தப்பி ஓடுகின்றனர் என்றவாறு செய்திகள் வெளியாக ஆரம்பித்தன;

ஆகஸ்ட் 8இன் பின்னர் இராணுவ மற்றும் அரசியல்

பது குறித்த பாரதூரமான சந்தேகங்கள் மக்களிடையே ஏற்பட ஆரம்பித்துள்ளன.

கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அரசுப் பிரதிநிதியான அமைச்சர் ஹமீதுடன் நடத்திய பேச்சுக்களின் அடிப்படை நிலையில் இருந்து பேச்சுக்களைத் தொடரலாம் என்று விடுதலைப் புலிகளின் பிந்திய அழைப்பு கோடி காட்டுவதாக வடபகுதியில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளுடன் முன்னர் பேச்சுகள் நடத்திய போது ஏற்பட்ட அனுபவங்கள், பேச்சுகள் நடத்திய சமயத்தில் விடுதலைப் புலிகளுக்கு அரசு ஆயுதங்கள் வழங்கியது என்ற எதிர்க் கட்சிகளின் குற்றச்சாட்டுகள் ஆகியன காரணமாக விடுதலைப் புலிகளுடனான பேச்சுகளின்போது அரசாங்கம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

இறுதி ஆய்வின்படி, 'ஒற்றையாட்சியை ஏற்க வேண்

கங்கள் நிச்சயமற்ற தன்மையில் இருப்பதால், விடுதலைப் புலிகளால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகக் காணப்படும் ஏதாவது ஒரு வகை இணைப்புடன் கூடிய தீர்வு ஒன்றைக் கொண்டு வந்து பிரச்சினையைத் தீர்க்க அரசு இணங்குமா என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

#### இணைப்புக்கு எதிர்ப்பு

நிரந்தர இணைப்புக்கு ஐ. தே. க., சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன; தமிழ்க் கட்சிகள் இணைப்பை வலியுறுத்துகின்றன.

இணைப்பு விஷயத்தில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு வேறாக இருக்க முடியாது.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தும்போது வடக்கு - கிழக்கு நிரந்தர இணைப்பு ஒன்றாக இருக்கும்; இதுதான் அரசுக்குக் கஷ்டமான காரியமாக இருக்கப் போகிறது.

## இராணுவ ரீதியாக வெற்றி அருகி விட்டது! அரசின் அடுத்த நடவடிக்கை என்ன?

ரீதியான நிலவரங்கள் பாதகமான விளைவுகளையே கொண்டு இருந்தன.

#### பலமான நிலையில் பேச முடியும்

பாதுகாப்புப் படையினர் மத்தியில் உள்ள பிரச்சினைகள், படையினர் தப்பி ஓடுவது ஆகியன பற்றி விடுதலைப் புலிகளுக்கு இப்போது தெரியும். இதன் காரணமாக விடுதலைப் புலிகள் இப்போது பலமான நிலையில் இருந்து பேசமுடியும்.

கொப்பேகடுவவின் மரணத்தைத் தொடர்ந்து இராணுவ நடவடிக்கைகளின் தீவிரம் குறைந்துவிட்டது என்பதால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவ ரீதியில் வெற்றிபெற முடியுமா என்

டும்; ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும்; பேச்சுகளில் பிரபாகரன் கலந்து கொள்ள வேண்டும்'' — என்ற நிபந்தனைகளை ஏற்கனவே விதித்த அரசாங்கம், விடுதலைப்புலிகளுடன், ஒரு தலைப்பட்சமான முறையில் உடன்பாடு ஒன்றுக்கு அரசு வருமா என்ற கேள்வி எழுந்துள்ளது;

#### எதிர்க்கட்சிகள் ஏற்றுக்கொள்ளமாட்டா

இந்த விதத்தில் வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு பிரச்சினையே கெதியாக இருக்கும்; எச்சூழ்நிலையிலும் நிரந்தர இணைப்பை பிரதான எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்ளப் போவது இல்லை என்பது தெளிவாகிவிட்டது.

இந்த நிலைவரத்தில் அரசாங்கத்தின் இராணுவ நோக்

இணைப்புக்குக் குறைந்த எதனையும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது நன்கு தெரிந்த நிலையில்—

அரசு என்ன செய்ய உத்தேசித்துள்ளது என்பது குறித்து தீவிரமாகச் சிந்திக்க வேண்டியுள்ளது

இராணுவ ரீதியில் வெற்றி பெறும் வாய்ப்பு அருகி உள்ள இவ் வேளையில்— பேச்சுவார்த்தைக்கான யோசனைகள் எவற்றையும் முன்வைக்காத இந்த நிலையில்—

அப்படி ஒரு யோசனையை அரசு முன்வைக்கும் பட்சத்தில், அரசின் அடுத்த நடவடிக்கை எப்படி அமையப் போகிறது என்பதை நாடு கவனித்துக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமே இல்லை.

★

## தெரிவுக்குழு....

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார்.

அதற்கு தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகள், தொண்டமானின் முந்திய யோசனையை தாம் ஆதரிப்பதாகக் கூறினார்கள்.

அந்தக் கட்டத்தில் தொண்டமானின் முந்திய யோசனை (11-12-1992) வெள்ளிக்கிழமை விவாதிப்பது என்று தெரிவுக்குழு முடிவு செய்தது,

—இவ்வாறு ''சண்டே டைம்ஸ்'' குறிப்பிட்டது. ''சண்டே ஐலண்ட்'' தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

#### டிசம்பர் 11

தெரிவுக்குழு அன்று கூடிய போது, இந்திய மாநிலங்களை ஒத்த அதிகாரப்பரவலாக்கலை கொண்ட மாகாண சபைகளை அமைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் ஏற்றுக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது;

வடக்கு - கிழக்கு இணைப்பு விஷயம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, இணைப்பை எதிர்த்து 42 எம். பிக்களும் ஆதரித்து இ. தொ. கா. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ். கட்சிகளைச் சேர்ந்த மூன்று எம். பிக்களும் வாக்களித்தனர்.

இதனால் இந்திய பாணியிலான அதிகாரப்பரவலாக்கல் முறையைக் கொண்டு வருவது என்ற கருத்துடன்கூடு ஆக் கட்டத்தில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இரண்டு மாகாணசபைகளை அமைக்கும் யோசனையைத் தாம் எதிர்ப்பதாக அமைச்சர் தொண்டமான் கூறினார்.

இந்திய வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அளவுக்கு மாகாணசபை

களுக்கு கிடைக்கக்கூடியதான யோசனையை அமைச்சர் ஹமீது சமர்ப்பித்தார்.

சமஷ்டியை ஆதரிக்கிறீர்களா என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் கேட்டதற்கு --

தாம் சமஷ்டி முறையை ஆதரிப்பதாகவும், அது இந்திய பாணியிலானதாக இருக்க வேண்டும் என்றும் அமைச்சர் ஹமீது பதிலளித்தார்;

காணிப்பங்கீடு பற்றிய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படக் கூடாதென்றும் —

அவ்வதிகாரங்கள் மத்திய அரசிடமே இருக்க வேண்டும் என்றும் சுதந்திரக் கட்சி எம். பி. லக்ஷ்மன் ஜயக்கொடி தெரிவித்தார்;

நாடாளுமன்றத் தெரிவுக் குழு தனது அடுத்த அமர்வுக்கான திகதி எதனையும் குறிக்காது கலைந்தது.

(உ-எ)

---

## கப்பல்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலின் சேவையுடன் கப்பல் சேவை தற்காலிகமாக இடை நிறுத்தப்படும் என்று அதிகாரசபை சேவைகள் நாயகம் அரச அதிபருக்கு அறிவித்திருக்கிறார்.

நிவாரணத்துக்கு என அனுப்பப்பட்ட பொருள்கள் தற்போது உணவு முத்திரை மற்றும் மாணவர் உணவு முத்திரை ஆகியவற்றுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

அதன் காரணமாகவும், குடாநாட்டில் தற்சமயம் உணவுக் கையிருப்பு மோசமாக உள்ளதாலும், கப்பல் சேவையை இடை நிறுத்தும் முடிவை கைவிடுமாறு யாழ் அரச அதிபர் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் கொழும்புக்கு [illegible] அனுப்பி வைத்தார்.

(உ-[illegible])

## கள்ளநோட்டு வர்த்தகம்: 20தமிழர் கொழும்பில் கைது

கொழும்பு, டிச. 16

கள்ளநோட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட — இருபது தமிழர்களைக் கொண்ட — ஒரு கோஷ்டியை கொழும்பில் பொலீஸார் கைது செய்துள்ளனர். இவர்களில் ஐவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள்;

புறக்கோட்டையிலும் ஏனைய இடங்களிலும் சுமார் 20 வர்த்தகர்களை ஏமாற்றி இருபது லட்சம் ரூபா வரை கள்ளநோட்டுகளை இவர்கள் புழக்கத்தில் விட்டதாகவும் —

சிங்களவர் ஒருவரின் உதவியுடன் இவர்கள் இந்த ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது;

(உ-3)

## றொனி நாடு திரும்பினார்

முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் நான்கு வருடகால அஞ்ஞாதவாசத்தின் பின்னர் திங்கள் லண்டனில் இருந்து நாடு திரும்பினார்.

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அவரை வரவேற்க பெரும் திரளானோர் திரண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டின் தலைவர்களையும் மக்களையும் மகாசங்கத்தினரையும் சந்தித்த பின்னர் தனது எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்ய இருப்பதாக அவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கும் ஐ. தே. கட்சியின் வருடாந்த மாநாட்டில்— மாத்தறை மாவட்டத்தையும் தமது புலத்தினைத் தொகுதியையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான ஆதரவாளர்களுடன் — றொனி டி மெல் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது

(உ-த-6)

## 2 இழுவைப் படகுகள் பருத்தித்துறைக்கு

யாழ்ப்பாணம், டிச. 16

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கும் பணியைத் துரிதப் படுத்துவதற்காக இரண்டு இழுவைப்படகுகள் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து இன்று பருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்து சேரவுள்ளன.

( உ - 3)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிச 16

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மன்றத்தின் ஆதரவில் ''யூனிட் ட்ரஸ்ட்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நாளை வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும்;

இக் கருத்தரங்கில் யாழ். இலங்கை வங்கி பிரதேச முகாமையாளரும் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள்.

( உ )

---

## 'ஜெயசங்கா'...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள படையணிகளைச் சேர்ந்த காலாட் படையினர் பெரும் எண்ணிக்கையில், தொப்பிகலையைப் பகுதியிலும் மட்டக்களப்புத் தென்பகுதிக் காடுகளிலும் பெரும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டனர் என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் உட்பட

# 3 மாநிலங்களில் ஆட்சியிலுள்ள பாரதீய ஜனதா அரசுகள் கலைப்பு!

புதுடில்லி, டிச. 16

மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள பாரதீய ஜனதாக் கட்சியின் அரசுகளை பதவி நீக்கம் செய்வது என்று இந்திரா காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அரசியல் விவகாரக் குழு கடந்த நிலைக் கட்கிழமை தீர்மானித்தது.

காங்கிரஸின் சிரேஷ்ட அமைச்சர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் — அமைச்சர் அர்ஜுன் சிங்கின் நிர்ப்பந்தத்தினால் இம்முடிவை அரசியல் விவகாரக்குழு எடுத்ததாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இந்த முடிவு, பிரதமர் நரசிம்மராவின் அதிகாரத்தை செல்வாக்கைக் குறைப்பதாக அமையும் என்று பிரதமருக்கு அவரது ஆலோசகர்கள் தெரிவித்துள்ளதாகவும் பி.பி.ஸி. கூறியது.

இந்திய மத்திய அமைச்சரவை நேற்றுக் காலை கூடி இது பற்றி ஆராய்ந்ததாகவும்—

தொடர்ந்து இவ்விடயம் குறித்து அமைச்சரவை நேற்று மாலையும் ஆராய இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று புதன்கிழமை நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் மீண்டும் கூடுகின்றன. அப்போது மூன்று மாநிலங்களிலும் உள்ள பாரதீய ஜனதா அரசுகளைக் கலைப்பது பற்றி இரண்டில் ஒரு முடிவு தெரியவரலாம் என்றும் பி.பி.ஸி. செய்தியாளர் அறிவித்தார்.

அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்டதை ஆதரித்து மூன்று மாநிலங்களிலும் உள்ள பாரதீய ஜனதா அரசுகள் கருத்து வெளியிட்ட காரணத்தினால் தான் அவை கலைக்கப்படவேண்டும் என்று மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் வலியுறுத்தி வருகின்றார். [உ-எ]

## மரண அறிவித்தல்கள்

### அப்பையா காமாட்சிப்பிள்ளை

செருக்கப்புலம் தெல்லிப்பழையைச் சேர்ந்த அப்பையா காமாட்சிப்பிள்ளை நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற அப்பையாவின் அன்பு மனைவியும், சரஸ்வதி, பரிபூரணம், தனலஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்கினேஸ்வரி, சாரதாதேவி, கமலாதேவி, வசந்தாதேவி, பாலச்சந்திரன் (காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியம் (ரயில்வே திணைக்களம், திருகோணமலை), சிவபாதரத்தினம் (நகுலேஸ்வரா மகாவித்தியாலயம், கீரிமலை), இந்திரகேஸ்வரன் (சவுதி அரேபியா), பாலச்சந்திரன் (காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபனம்), உஷா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு பூநாறிமடம் கொக்குவில் மேற்கு கொக்குவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. பாலச்சந்திரன்
(மகன்)

பூநாறி மடம்,
கொக்குவில்.

[23662]

### திருமதி குணபூரணம் பரஞ்சோதி

மல்லாகத்தை சேர்ந்தவரும் தற்போது No. 35, மாட்டின் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி குணபூரணம் பரஞ்சோதி காலமானார். இவர் காலஞ்சென்ற கி. ஞா. பரஞ்சோதியின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும் திரு. ப. யோ. ஞானசோதி (பிரதி அதிபர், அடம்பன் ம. ம. வி.), திருமதி ஜெயசோதி எட்வேட் (கனடா), திரு. ப. யோ. தேவசோதி (D I T தெகிவளை), காலஞ்சென்ற ஆசிரியை திருமதி அமலசோதி இராஜேஸ்வரன், திருமதி நிர்மலசோதி லோரன், திரு. ப. யோ. சத்தியசோதி (பொறியியலாளர், கொழும்பு), திரு. ப. யோ. அருட்சோதி (MILK FOOD AND DRUGS LTD, JAFFNA) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி ஞா. மரிரத் (தச்சனாமருதமடு), திரு. றெக்ஸ் எட்வேட் (கனடா), திருமதி தே. புஸ்பராணி (தெகிவளை), திரு. இராஜேஸ்வரன் (யாழ்ப்பாணக் கல்லூரி), திரு. வெனடிக்ற் யோசவ் லோபர் (துறைமுக அதிகாரசபை, கொழும்பு), திருமதி ச. டெடிக் நவராணி (கொழும்பு), திருமதி அ. ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கு புனித அடைக்கல மாதா ஆலயத்திற்கு எடுத்துச் சென்று, புனித, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ப. யோ. அருட்சோதி

35, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

[5652]

### தம்பையா தில்லைநாதன்

நயினாதீவைச் சேர்ந்த தம்பையா தில்லைநாதன் டென்மார்க்கில் காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பையா தையலம்மா ஆகியோரின் அன்பு மகனும் சிவகலையின் அன்புக் கணவரும், சாம்பவியின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற செல்லத்துரை, சிவாங்கை ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, குலசிங்கம், யோகநாதன், குகதாசன், வரதலட்சுமி, சுலோசனாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திருமதி வ. குலசிங்கம்

இல. 28 கொன்வென்ட் றோட்,
யாழ்ப்பாணம்.

(23664)

## OBITUARY

### Mr. G. D. Somasundaram

( Founder Director of Jaffna College Institute of Technology )

It is with regret we inform the death of Mr. G. D. Somasundaram, B. Sc. (Gen); B. Sc. (Sp. Maths); B. Sc. (Eng); A. C. G. I; C. Eng; F. I. E. E. (Lond); F. I. Mech. E (Lond); F. I. E. (Sri Lanka), founder Director of Jaffna College Institute of Technology, Vaddukoddai, in New Zealand.

[c/2838] Acting Director

★ பிந்திய செய்தி

## கலைப்பு பிரகடனம்

புதுடில்லி, டிச. 16

மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் ஆட்சி செய்யும் பாரதீய ஜனதாக் கட்சி அரசுகளை கலைப்பது என இந்திய மத்திய அமைச்சரவை நேற்று நள்ளிரவு முடிவு செய்தது. இதன் பிரகாரம் மூன்று அரசுகளையும் கலைக்கும் பிரகடனங்களை ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா நேற்றிரவு விடுத்தார். (உ)

## அஷ்ரப்பின் கோரிக்கை இது!

கொழும்பு, டிச. 16

பாலியல் நோய் மற்றும் "எயிட்ஸ்" நோய் பரவுவதை தடுக்குமுகமாக ஆண் ஒருவர் ஒரு மனைவிக்கு மேல் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் திகாமடுல்ல எம். பி. யுமான ஜனாப் எம். எச். அஷ்ரப் அரசுக்கு கோரிக்கை விடுத்திருக்கிறாராம். [உ-எ]

## ஸ்ரீசாரதாதேவி ஜெயந்தி தினம்

தூய அன்னை ஸ்ரீசாரதா தேவியின் 140 ஆவது ஜன்ம தினம் மருதனாமடம் ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தில் இன்று அனுஷ்டிக்கப்படும்.

காலை 5.30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். முற்பகல் 11.30 மணிக்கு விசேட பூஜை நடைபெறும். மாலை 5.30 மணிக்கு அன்னையின் வாழ்க்கை வரலாற்று நூலில் இருந்து சில பகுதிகள் வாசிக்கப்படும்.

★ ★ ★

ஸ்ரீ சாரதாதேவியின் 140 ஆவது ஜன்ம தின நிகழ்ச்சிகள் திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

## இன்றைய ஆட்டம்

யாழ். மிட்ரவுன் றோட்டறக்ற் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 4 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பாடுமீன் கழக அணியை எதிர்த்து சென். றோக்ஸ் கழக அணி மோதும். [உ-3]

### முதலில் யுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி:- மற்றத் தரப்பு பிடிவாதமாக இருந்தால் அதை பேச்சுவார்த்தையை ஆயுதப் பலத்தைப் பெருக்கிக் கொள்ளப் பயன்படுத்தினால், அப்போது பேச்சுவார்த்தையில் நம்பிக்கை வைக்க முடியுமா?

பதில்:- பேச்சுவார்த்தை தோற்றால் மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் என்பதே எனது பதில். மீண்டும் மீண்டும் பேச்சு நடத்த ஒரு போதும் மறுக்கக் கூடாது. எப்படியாயினும் பேச்சு நடைபெறும் காலத்தில் ... உறுதி செய்ய வேண்டும் — என்றார். [உ-எ]

## மூத்த அமைச்சர்களின் மிரட்டலுக்கு ராவ்பணிந்தார்

அயோத்திப் பிரச்சினையில் பிரதமர் நரசிம்மராவ் நடந்து கொண்ட விதம் குறித்து அவரது அமைச்சரவையில் இடம் பெறும் பாதுகாப்பு அமைச்சர் சரத் பவாரும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அர்ஜுன் சிங்கும் கடுமையான கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர்.

அந்த அமைச்சர்களின் நிர்ப்பந்தம் காரணமாக — தமது விருப்பத்துக்கு மாறாக — மூன்று மாநிலங்களில் உள்ள பாரதீய ஜனதாவட்சி அரசாங்கங்களைக் கலைக்க வேண்டிய நிலைக்கு பிரதமர் ராவ் தள்ளப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையில்— பிரதமர் நரசிம்மராவுக்கு எதிராகச் செயற்படும் மூத்த தலைவர்களினால் பிரதமர் ராவ் தமது பதவியை இழக்கக் கூடும் என்று புதுடில்லியில் உள்ள அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டனர்.

இந்த இரண்டு அமைச்சர்களும் நடத்தும் உட்கட்சிப் போராட்டத்தை திரு. நரசிம்மராவ் சமாளித்து விடுவார் என்று வேறு சிலர் நம்பிக்கை வெளியிட்டனர். [உ-எ]

## மாகாணசபைத் தேர்தலுக்கு ஐ. தே. க. தயாராகிறது!

மாகாணசபைத் தேர்தல்களுக்குத் தயாராகும்படி ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தமது எம். பிக்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் கட்சி அமைப்பாளர்களை உஷார்ப்படுத்தியுள்ளது.

தேர்தல் நடவடிக்கைக் குழு ஒன்று அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. வடமேல் மாகாண முதலமைச்சர் காமினி ஜெயவிக்ரமபெரேரா மற்றும் ராஜாங்க அமைச்சர் டாக்டர் விமல் விக்ரமசிங்கா ஆகியோர் குழுவின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும்.

இதற்கு முன்பதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படக் கூடிய சாத்தியமும் இருப்பதாக "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போது இடம்பெற்று வரும் ஆடை தயாரிப்புத் தொழிற்சாலைத் திறப்பு விழாக்கள் அரசியல் பேரணிகளாக மாறி வருவதையும்—

அவற்றில் ஜனாதிபதி பிரேமதாஸா நீண்ட அரசியல் உரை நிகழ்த்துவதையும் இதற்கு ஆதாரமாகக் காட்டப்படுகின்றது.

ஐ. தே. க. தலைமைக் காரியாலயத்தில் அரசியல் சார்பற்ற அமைப்புகள் பல நிறுவப்பட்டு வருவதும் ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடத்தப்படலாம் என்பதை உணர்த்துவதாக உள்ளனவாம்.

ஆளும் கட்சியுடன் நேசக் கட்சிகளாக விளங்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் அமைப்புகளையும் ஜனாதிபதி தேர்தலுக்கு தயாராக இருக்கும்படி உஷார்ப்படுத்தப்பட்டுள்ளன என்று தமிழ் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [ஒ-எ]

## பிரேமாவின் உத்தரவு வரை யுத்தம் தொடரும்!

கொழும்பு, டிச. 16

ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தரவு கிடைக்கும் வரை விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் தொடரும்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நலின் அங்கமுவ செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

வீதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடை முகாம்களில் வாகனங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படும் போது வாகனத்தின் உள்ளே இருப்பவர்கள் தமிழரா சிங்களவரா என்று கேட்கக்கூடாது என்று படையினருக்கு உத்தரவிடப்படும் என்றும் பிரிகேடியர் அங்கமுவ கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சோதனையின் போது வாகனங்களின் உள்ளே இருப்பவர்கள் தமிழரா சிங்களவரா என்று படையினரால் வினவப்படுவதாக முறைப்பாடுகள் வந்துள்ளன என்று செய்தியாளர் ஒருவர் கூறியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஒ-எ)

## பாதுகாப்பு நிலைமை.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிரான தாக்குதலை இப்போது ஆரம்பிக்காமல் மேலும் அரச ஒத்திவைக்குமானால் வடக்கு - கிழக்கில் பாதுகாப்பு நிலைவரம் கட்டுப்பாட்டை மீறிச் சென்றுவிடும்.

### அரசின் கவனம் தேர்தலில்

எதிர்வரும் தேர்தல்கள் குறித்து அரசின் கவனம் செல்கிறது.

இதனால் அண்மையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சண்டையில் தமது வளங்களை அரச பயன்படுத்தும் சாத்தியம் துப்பரவாக இல்லை என்றே தெரிகின்றது.

இந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டின் முற்பகுதியிலோ தீர்க்கமான கூட்டு இராணுவ நடவடிக்கை எதையும் அரச தொடங்கும் சாத்தியமும் இல்லை.

இதே வேளை—

யாழ். குடாவிலும் வன்னியிலும் அங்கும் இங்குமாக குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தும் அரசின் முடிவு, புதிய போராளிகளுக்கு உள்ள பயிற்சி வழங்குவதற்கும் கடற்புலிகளைப் பலப்படுத்துவதற்கும் விடுதலைப் புலிகளுக்கு கால அவகாசத்தை அளிக்கின்றது.

### கடற்புலிகளால் அச்சுறுத்தல்

கடற்புலிகளின் நடவடிக்கை அதிகரித்துள்ளது.

இது, கரையோரப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவ முகாம்களுக்கும் படைப் பிரிவுகளுக்கும் ஒருநாள் பெரிய அச்சுறுத்தலைக் கொடுக்கும் என்று ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக கடற்பகுதியில் உள்ள படையினருக்கு உணவு விநியோகத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் இராணுவம் இருந்து வருகின்றது.

இதனால் கடற்பகுதியில் உள்ள படையினரை கரையோரப் பகுதியில் உள்ள முகாம்களுக்கு இடமாற்றம் செய்வதில் இராணுவம் ஈடுபட்டுள்ளது.

கரையோரப் பகுதி முகாம்களில் படையினரை வைத்திருப்பதன் மூலம் அவர்களுக்கு இலகுவாக உணவுப் பொருள்களை விநியோகிக்க முடியும் என்றும் —

விடுதலைப் புலிகள் பெரிய தாக்குதல் எதனையும் நடத்தும் பட்சத்தில், கடல் நடவடிக்கை மூலம் படையினரைக் காப்பாற்ற முடியும் என்றும் இராணுவம் நம்புகின்றது.

இராணுவத்தின் சிந்தனையைத் தெரிந்துகொண்ட விடுதலைப் புலிகள், கடற்புலிகளின் நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்துவருகின்றனர்.

இது ஒருநாள் கடல்வழி மூலமான கூட்டு இராணுவ நடவடிக்கைகளை படையினர் மேற்கொள்ள முடியாத நிலையை ஏற்படுத்தும்.

### புலிகள் கை ஓங்கும்

தரையில் விடுதலைப் புலிகள் காட்டும் திறமையுடன், கடற்புலிகளின் அச்சுறுத்தல் அதிகரிப்பது படையினரின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்கும்.

வடபகுதிப் போர்முனையில் விடுதலைப் புலிகளின் கை ஓங்க இது இடமளிக்கும்.

— இவ்வாறு அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 16-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org